Praise the Lord: Let us Pray.

## சங்கீதம் / Psalm 33:12

கர்த்தரைத் தங்களுக்குத் தெய்வமாகக்கொண்ட ஜாதியும், அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்துகொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது.

Blessed *is* **the nation** whose God *is* the LORD, The people He has chosen as His own inheritance. (NKJV).

ஜாதி என்பது ஆங்கிலத்தில் Nation என்று குறிப்பிடப்பட்டுள்ளது. The word "Nation" also means the people of nation.
ஜாதி என்பதை மக்கள் இனம், நாடு என்னும் அர்த்தங்களில் நாம் தியானிக்கலாம்.

## *மீண்டுமாக* சங்கீதம் / Psalm 33:12

2 விதமான ஆசீர்வாதங்கள் இதிலே உள்ளன. தியானியுங்கள்.

முதலாவது ஆசீர்வாதம் நாம் தேவனைத் தெரிந்துகொள்வது:
இரண்டாவது ஆசீர்வாதம் அவர் நம்மைத் தெரிந்து கொள்வது.

2 different blessings are there. Please think and meditate.

First Blessing is as we know and take the lord is our God.
Second Blessing is because He has chosen us as His Own Inheritance.

*(Canada Parliament main building ல்….. Psalm 139:8-10…எழுதப்பட்டுள்ளது).*

*இந்த நாடும்.......நாட்டில் தேவன் தெரிந்துகொண்ட மக்களும்.……ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்….)*

நாடு கர்த்தரை தெரிந்துகொள்ளவேண்டுமென ஜெபித்துக்கொள்வோம்.
ஒரு மக்கள இனம் கர்த்தரை தெரிந்துகொள்ளவேண்டுமென ஜெபித்துக்கொள்வோம்.
(Malvern Community கர்த்தரை தெரிந்துகொள்ளவேண்டுமென ஜெபித்துக்கொள்வோம்.)

Pray for the Country to get to know about the Lord….Pray for a community….Pray for malvern community….
If you keep on think and meditate the Bible verse, it will give the great peace which this world cannot give.
இதை மேலும் மேலும் தியானித்துப் பாருங்கள். உங்கள் தியானத்திற்கு முடிவே இருக்காது.
தேவனின் வார்த்தைகள் ஜீவனுள்ளது என்பதை நீங்கள் ருசித்துப் பாருங்கள்.
உலகம் கொடுக்கமுடியாத சமாதானம் உங்களை ஆட்கொள்ளும். ஆமென்.

## *மீண்டுமாக* சங்கீதம் / Psalm 33:12

கர்த்தரைத் தெரிந்து கொண்ட ஜனமாக நாம் ஆசீர்வதிக்கப்பட்டதற்காக ஸ்தோத்திரம்.
கர்த்தர் நம்மைத் தெரிந்து கொண்டதற்காக அவருக்கு கோடானு கோடி ஸ்தோத்திரம்.

We all get to know about our LORD. We thank to our Lord.
We all have chosen by Our Lord. We thank for that to our Lord.

தேவனுடைய வேதம் ஜீவனுள்ளது என்பதையும் தேவன் கிறிஸ்துவின் மூலமாக நம்மை ஆசீர்வதித்து நமது ஜீவனைப் பரிபூரணப்படுத்த விரும்புகிறார் என்பதையும் அறியமுடியாமல், மக்களை உலக சூழ்நிலைகள் தடைபடுத்துகிறது. இப்படிப்பட்ட மக்களுக்கு நாம் தேவனைப்பற்றி சொல்லவும் அதற்காக பிரயாசப்படவும் வேண்டுமென்பதே….

நம்மைத் தெரிந்தெடுத்த தேவனின் பிரதான நோக்கமும் விருப்பமுமாக இருக்கிறது என்பதை நாம் அன்றாடம் வேதம் வாசித்து தியானிக்கும்போது உணர்ந்துகொள்ளலாம்.

This Bible is the Living word of God. Our Lord Gives the eternal everlasting Life through Jesus Christ. The world situation make many people NOT to understand this real fact.

Our Lord selected all of us, to make those people to understand about Our Lord's Plan and willingness to accept them for this great Everlasting Life.

## யோவான் / John 15:16

நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக <u>நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும்</u>, <u>உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும்,</u> நான் உங்களை ஏற்படுத்தினேன்.

You did not choose Me, but I chose you and appointed you that <u>you should go and bear fruit</u>, and *that* <u>your fruit should remain,</u> that whatever you ask the Father in My name He may give you.

தேவன் நம்மைத் தெரிந்தெடுத்ததின் நோக்கத்தையும் விருப்பத்தையும் இந்த வசனத்தின்மூலம் அறிகிறோம்.
From this verse we all can understand what is the purpose of our Lord on us.

## மாற்கு / Mark 16:15

பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.

And He said to them, “Go into all the world and preach the gospel to every creature.

உலகமெங்கும் போய் சொல்வதற்கு முன்பாக, நம்மோடு வாழ்ந்துகொண்டிருக்கும் Malvern Community க்கு போய் சொல்ல நாம் கர்த்தருக்குள் பிரயாசப்படுவோம்.

Before we go to all over the world, let us go to the Malvern Community people who are living with us and we will tell the Gospel with our God's grace and Power.

கர்த்தரைத் தங்களுக்குத் தெய்வமாகக்கொண்ட <u>ஜாதியும்</u>, அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்துகொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது.

Blessed *is* **<u>the nation</u>** whose God *is* the LORD, The people He has chosen as His own inheritance. (NKJV).

சகலமும் பரிபூரணமாக வாசம் செய்யும் கிறிஸ்துவைப் பின்பற்றும் நம் ஒவ்வொருவரிடத்திலும்…..
அவருடைய வார்த்தைகளின் கருத்துக்கள் சகலமும் பரிபூரணமாக ஜீவிக்கவும்….
ஜீவித்து வளரவும்….. வளர்ந்து பரிபூரணப்படவும்…..
கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் ஆட்கொண்டு ஆசீர்வதிப்பாராக.

All the fullness dwell in Christ. Let His Living word live in us, grow in us and become more and more towards His fullness. God will help and bless all of us to achieve this.

பெரிய காரியத்தை கர்த்தருக்கு செய்ய முயற்சிப்போம். பெரியகாரியத்தை கர்த்தரிடத்திலிருந்து எதிர்பார்ப்போம். என்று William Carey என்ற விசுவாசி சொன்னார். அப்படியே செய்தார் அவர் வாழ்க்கையில்.

"Expect great things from God, Attempt great things for God." - William Carey said this. He did this in action.

சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று. (கொலோசெயர் / Colossians 1:19-20)

For it pleased the Father that in Him all the fullness should dwell, and by Him to reconcile all things to Himself, by Him, whether things on earth or things in heaven, having made peace through the blood of His cross. (NKJV)

**Let us Pray**